1969 சனவரி 29] [பேரவைத் துணைத் தலைவர்]

தக்கபடி வினாக்கள் போட்டுக் கூடியவரையில் இந்த ஒரு மணி நேரத்தை எப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இந்த இரண்டு ஆண்டுக் காலமாக என்னுடைய கேள்வி ஒன்றுகூட வரவில்லை. நான் கேள்வி கொடுக்கும்போது ஒவ்வொரு தடவையும் புதுப்பிக்கலாம், புதுப்பிக்கலாம் என்று வருகிறதே தவிர, என் கேள்வி ஒன்றும் வரவில்லை. இன்றியமையாதவற்றிற்கு அதற்கப்புறம் பதில் சொன்னால் பயன் இல்லை. இந்த ஆபத்தையாவது தவிர்த்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் வந்து சட்டப்பேரவைத் துறையில் அனுமதிக்கப்பட்டு, மற்றத் துறைகளுக்கு அனுப்பி, அதற்கான விடைகளைப் பெறவேண்டியிருக்கிறது. அந்தத் துறைகளிலிருந்து நமக்குப் பதில்கள் வந்த பிறகு அந்தக் கேள்விகளை அவைக்குக் கொண்டு வருகிறோம். அதில் கால தாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தை எந்தளவிற்குக் குறைக்க முடியுமோ, அந்தளவிற்குக் குறைப்பதற்கான முயற்சியை நானும் அவை முன்னவர் அவர்களும் எடுத்துக்கொள்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

அடுத்து, 'காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ்.' அவற்றைக் கொண்டு வரவேண்டிய இரண்டு உறுப்பினர்களும் இங்கு இல்லாத காரணத்தினால் அவற்றைத் தள்ளிவைக்க வேண்டியிருக்கிறது.

3. அமைச்சர் அறிக்கை.

துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 31-8-1968-ம் நாளன்று திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கேட்ட வினா எண் 214-க்கு விடையளிக்கப்பட்டதையொட்டி, திரு. நா. காசிராமன் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரிசெய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 31-8-1968 அன்று சட்டப் பேரவையில் சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஆளுகையிலிருந்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நகரச் சாலைகளின் பராமரிப்புக் குறித்து, திரு. கோமதி சங்கர தீட்சிதர், எம்.எல்.ஏ., அவர்களின் வினாவின் மேல் திரு. காசிராமன், எம்.எல்.ஏ., அவர்கள் எழுப்பிய துணை வினாவுக்குப் பதிலளிக்கையில் கடற்கரைச் சாலை வடக்கே சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அரசினரால் பராமரிக்கப்படுகிறது என்றும், மெரினா கடற்கரைச் சாலை அரசினர் பராமரிப்பில் இருக்கிறதெனவும், பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே மேற்படி சாலையில் அங்கத்தினர் (திரு. காசிராமன், எம்.எல்.ஏ.,) சுட்டிக்காட்டிய குறைபாடுகள் கவனிக்கப்படும் என்றும்

அறிவிக்கப்பட்டது. ஆனால் மெரினா கடற்கரைச் சாலை சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அகில இந்திய வானொலி நிலையம் வரை உள்ள பகுதி சென்னை மாநகராட்சி மன்றத்தால் பராமரிக்கப் படுகிறது எனவும், மேற்படி சாலையில் பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே உள்ள குறைபாடுகள் மாநகராட்சி மன்றத்தால் கவனிக்கப்பட்டன என்றும் இப்போது தகவல் கிடைத்துள்ளது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

4. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அவை மசோதா எண் 18/1968).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை * அவை முன் அளிக்கிறேன்.

(இ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. முதலமைச்சரின் உடல்நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலைபற்றிய அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நேற்றுக் காலை சிறிதளவு மார்பு வலி ஏற்பட்டது. டாக்டர்கள் தக்க சிகிச்சை அளித்து, தூக்கத்திற்கான மருந்தும் அளித்தனர். பிறகு மார்பு வலி தணிந்தது, சிறிது பிராணவாயு தரப்பட்டது என்றும், இனி அது தேவைப்படாது என்றும் டாக்டர்கள் கூறுகிறார்கள். ரேடியம்

---

* 1969 சனவரி 29-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.